தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

பங்குனி 15, சுக்ல—திருவள்ளுவர் ஆண்டு 2021.

1990 மார்ச் 29, வியாழக்கிழமை.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் திரு. வீ. பெ. துரைசாமி அவர்கள் தலைமையில் காலை 9-00 மணியளவில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் :

''நெருப்பினுள் துஞ்சலும் ஆகும் நிரப்பினுள்
யாதொன்றும் கண்பாடு அரிது''

ஒருவன் நெருப்பினுள் படுத்துத் தூங்குதலும் கூடும் ; ஆனால், வறுமை நிலையில் எவ்வகையிலும் கண்மூடித் தூங்குதல் அரிது.

1. வினாக்கள்—விடைகள்

உடுக்குறியிட்ட வினாக்கள்

பெண்களுக்கு வேலை வாய்ப்பு.

*799—திருமதி. ஏ. எஸ். பொன்னம்மாள் :

மாண்புமிகு முதல் அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெண்களுக்கு வேலை வாய்ப்பு கொடுப்பதில் எல்லாத் துறைகளிலும் 30 சதவீதம் பூர்த்தி செய்யும் அளவில் வேலைகள் அளிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்படுமா ?

(ஆ) ஆரம்பப் பள்ளிகளில் 5-ஆம் வகுப்பு வரை காலி இடங்களில் எல்லாம் பெண்கள் நியமிக்கப்படுவார்களா ?

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே,

(அ) ஆம், அரசுத் துறை, அரசுத் துறை சார்ந்த நிறுவனங்கள் ஆகியவற்றில் நேரடி நியமனம் செய்வதற்கான காலியிடங்களில் 30 சதவிகிதம் பெண்கள் நியமிக்கப்படவேண்டும் என்று அரசு ஆணை வெளியிட்டுள்ளது.

(ஆ) தொடக்கப்பள்ளி மற்றும் நடுநிலைப் பள்ளிகளில் இரண்டாம் வகுப்பு வரை ஏற்படும் ஆசிரியர்க்கான காலியிடங்களில் பெண்களையே நியமனம் செய்யவேண்டுமென ஏற்கனவே ஆணை வெளியிடப்பட்டுள்ளது. மேலும் தொடக்கப்பள்ளிகளில் ஏனைய வகுப்புகளில் நடப்பு கல்வியாண்டில் எழும் காலிப் பணியிடங்களில் 50 சதவிகிதம் பெண்கள் நியமனம் செய்யப் படவேண்டும் எனவும் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

திரு. எச். எம். ராஜு: துணைத் தலைவர் அவர்களே, ஆதிவாசி படித்த பெண்களுக்கும், ஆதி திராவிட படித்த பெண்களுக்கும், வறுமைக் கோட்டிற்குக் கீழே வாழும் படித்த பெண்களுக்கும், உடல் ஊனமுற்ற பெண்களுக்கும் இந்த அரசு இதில் முன்னுரிமை வழங்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெண்களுக்கே அத்தகைய உரிமைகள் வழங்கப்படும் என்கிற போது அதிலே மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தப் பட்டியலும் சேரும்.

திருமதி பாப்பா உமாநாத்: தலைவர் அவர்களே, நம்முடைய இந்த அரசு அமைக்கப்பட்ட நாளிலிருந்து பெண்களுக்கு 30 சதவீதம் ஒதுக்கப்பட வேண்டுமென்ற அரசாணையின்படி இதுவரையில் தமிழ் நாட்டில் இருக்கிற பள்ளிகளில் எத்தனைபேர் நியமனம் செய்யப்பட்டிருக்கிறார்கள் என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, இன்னும் அந்த விவரம் வந்து சேரவில்லை.

திரு. வே. தங்கபாண்டியன்: தலைவர் அவர்களே, பெண்களுக்கு 30 சதவீதம் வேலை ஒதுக்கீடு அரசு அலுவலகங்களில் இருப்பதைப் போல பொது நிறுவனங்களிலும் பெண்களுக்கு 30 சதவீதம் இட ஒதுக்கீடு கொடுக்கவேண்டுமென்ற தீர்மானத்தை அரசு நிறைவேற்றி அதை வலியுறுத்துமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, பெண்களுக்காக 30 சதவீதம் ஒதுக்கீடு அரசுத் துறைகளில் நேரடி நியமனம் முறையில் வரும் அனைத்து வேலை வாய்ப்புகளுக்கும் பொருந்தும் என்பதைத் தான் இப்போது என்னால் கூற முடியும்.

1990 மார்ச் 29]

திரு. கே. அர்ஜுனன் : தலைவர் அவர்களே, இப்படிப் பட்ட நல்ல திட்டத்தை செயல்படுத்துகிற அரசு, முன் உதாரண மாக, அதைச் செயல்படுத்தக் கூடிய அமைச்சரவையில் 30 சத வீதத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கடைப்பிடிப்பார் களா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி ; தலைவர் அவர் களே, இதில் அரசு நியமனங்கள் என்று தான் இருக்கிறது. அமைச்சரவை நியமனம் என்று இல்லை.

திரு. ஆர். சிங்காரம் : தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்வு செய்யப்படுகிறபோது அனைத்துக் கட்சிகளும் 30 சதவீதம் சீட்டு கொடுக்கிறார்கள். ஆனால், தேர்தலில் 30 சதவீதம் தேர்ந்தெடுக்கப்படாத காரணத்தால் அந்த 30 சதவீதத்தை நியமன முறையில் அரசு நியமிக்க உத்தேசம் உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : தலைவர் அவர்களே, அரசுப் பணிகளுக்கான நியமன முறை பற்றியது தான் இக் கேள்வி. ஆகவே, நியமன முறைக்கு 30 சதவீதம் உண்டு என்பதைப் பற்றித்தான் நான் விளக்கம் அளித்துக் கொண் டிருக்கிறேன்.

திரு. வ. முல்லைவேந்தன் : தலைவர் அவர்களே, தொடக்கப் பள்ளி ஆசிரியர்களாக பெண்கள் நியமிக்கப்படுவார் கள் என்ற அடிப்படையில் குறிப்பாக மலைப்பகுதியில், போக்குவரத்து வசதி இல்லாத இடங்களில் 10, 15 கிலோ மீட்டர் நடந்து சென்று பெண்கள் பணியாற்ற வேண்டிய சூழ்நிலை இருப்பதால் அப்படிப்பட்ட இடங்களில் விதிவிலக்கு அளித்து பெண்களுக்குப் பதிலாக ஆண்களை ஆசிரியர்களாக நியமிக்கும் எண்ணம் அரசுக்கு உண்டா என்பதை அறிய விரும்புகிறேன்.

9–05 மணி

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, நடந்து செல்வதற்கு பெண்களே தயாராக இருக் கும்போது, முல்லைவேந்தனுக்குக் கால் வலிக்க வேண்டிய அவசியம் இல்லை. (சிரிப்பு)

திரு .சி. கோவிந்தசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே 30 சதவீதம் பெண் களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கும் இந்த நல்ல நேரத்தில், தனியார் தொழிற்சாலையில் இருக்கிற பெண்களையும் குறைக் கின்ற ஒரு போக்கு தொடர்ந்து வருகிறது. ஆகவே, இதைக் கட்டுப்படுத்த அரசு முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

வாய்மையே வெல்லும் TRUTH ALONE TRIUMPHS

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, அவர்களுக்கும் இது குறித்து அரசு பரிந்துரை செய்யும்.

திரு. வி. கே. சின்னசாமி : மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆரம்பப் பள்ளிகளில், ஆசிரியர் பணிப் பயிற்சி முடித்த பெண்களை நியமனம் செய்யும்போது, அவர்கள் எந்த ஆண்டு பயிற்சி முடித்து பதிவு செய்து இருக்கிறார்களோ, அந்த ஆண்டே அனைத்து பெண்களுக்கும் வேலை கொடுத்து விட்டு, அடுத்த ஆண்டு துவங்குகின்ற நேரத்தில், மீதமுள்ளவர்களுக்கு வேலை கொடுக்கின்ற வகையில், 'சீனியாரிட்டி' பிரகாரமாக அவர்கள் எந்த ஆண்டு பயிற்சி முடித்து இருக்கிறார்களோ,—அதாவது 1985 ஆம் ஆண்டு 500 பெண்கள் ஆசிரியர் பயிற்சியைத் தமிழ்நாட்டில் பெற்றிருக்கிறார்கள் என்றால், அவர்களுக்கு முழுமையாக வேலையைக் கொடுத்து விட்டு, அடுத்த ஆண்டு துவங்குகின்ற போது மீதமுள்ள பெண்களுக்கு வேலை வாய்ப்பை ஏற்படுத்தித் தர மாண்புமிகு முதல்வர் அவர்கள் முன்வருவார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, ஐந்து ஆயிரம் பேர்களை இந்தப் பணிகளுக்கு அமர்த்துகிற நேரத்தில் இதுபோன்ற இந்த நிலைமைகளை எல்லாம் கடைப்பிடிப்பது என்பது இயலாத காரியம், அதற்கு என்று சில தகுதி எண்கள் வைக்கப்பட்டுத்தான் அவர்களை நியமிக்க வேண்டியதாக இருக்கும்.

திரு. உ. ரா. வரதராசன் : துணைத் தலைவர் அவர்களே, அரசுத் துறையிலே 30 சதவீதம் இட ஒதுக்கீடு பெண்களுக்காக இருப்பதைப் போல மாநில அரசினுடைய பொதுத் துறை நிறுவனங்கள், மாநில அரசினுடைய பல்வேறு நிதி நிறுவனங்களுடைய உதவியோடு அல்லது மாநில அரசினுடைய மானியத்தோடு நடைபெறுகிற தொழில் கூடங்கள், இவற்றிலே 30 சதவீதம் இட ஒதுக்கீடு பெண்களுக்கு வேண்டும் என்ற முடிவை எடுத்து இந்த அரசு செயல்படுத்த முன்வருமா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : துணைத் தலைவர் அவர்களே, இந்த அரசு கடந்த ஆண்டு தொடங்கியுள்ள இந்தத் திட்டம் மெல்ல, மெல்ல, ஆனால் உறுதியாக நல்ல முறையிலே வளர்ச்சி அடையுமானால், அதனுடைய அடுத்த கட்டமாக அரசுத் துறைகளிலே மாத்திரம் அல்லாமல், தமிழகத்தில் உள்ள எல்லாத் துறைகளிலும் பெண்களுக்கு அதிக வாய்ப்புகளை அளிக்கக் கூடிய நிலைமை மலரும் என்றே நான் நம்புகிறேன்.